# ‘திராவிட மாடல்’ தத்துவமும், தனித்துவமும்!



தமிழ் மானம் காப்போம்' என்கிற முழக்கத்தோடு மக்களை சந்தித்து, அவர்களின் பேராதரவை பெற்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்று மூன்று ஆண்டுகள் நிறைவடைந்துள்ளது.

மக்கள் நல ஆட்சி என்பதற்கு உதாரணமாக, 'திராவிட மாடல்' அரசின் முதல் மூன்று ஆண்டுகள் வரலாற்றில் அழுத்தமான தடங்களை பதித்துள்ளது.

2022-2023 நிதியாண்டில் இந்திய ரிசர்வ் வங்கி, மாநிலங்களின் நிதிநிலை உள்ளிட்ட பல்வேறு காரணிகள் குறித்து விரிவாக ஆய்வு செய்து வெளியிட்ட கையேட்டின் அடிப்படையிலும், தமிழ்நாட்டின் நிதிநிலை அறிக்கைகள் அடிப்படையிலும், தமிழ்நாட்டின் வளர்ச்சி முந்தைய 10 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு, 2021 க்கு பிறகான மூன்று ஆண்டுகள் ஏற்பட்டுள்ளது தெளிவாகிறது.

உதாரணமாக தமிழ்நாட்டின் மொத்த மாநில உற்பத்தி அளவு 2017-18 (14.65 லட்சம் கோடி), 2020 - 21 (17.8 லட்சம் கோடி), 2021- 22 (20.71 லட்சம் கோடி), 2022-23 (23.46லட்சம் கோடி). அதாவது 2017 முதல் 2021 வரையிலான நான்கு ஆண்டுகளில் 3.23 லட்சம் கோடி அளவே மாநிலத்தின் உற்பத்தி அளவு உயர்ந்துள்ளது. ஆனால் திராவிட மாடல் அரசில், அதே அளவு வளர்ச்சியை இரண்டு ஆண்டுகளிலேயே எட்டியுள்ளோம்.

கொரோனா காரணமாக பொருளாதாரம் மந்த நிலை நிலவியதால் இந்த மாறுபாடு இருப்பதாக சிலர் கருதலாம். ஆனால் 2011-12 நிதியாண்டு தொடங்கி, கோவிட் பெருந்தொற்று பொது முடக்கம் ஏற்படும் வரையில் தமிழ்நாட்டின் சராசரி வளர்ச்சி விகிதம் 5.87% மட்டுமே, கோவிடுக்கு பின்பு திராவிட மாடல் அரசில் சராசரி வளர்ச்சி வீதம் 8% வரை உயர்ந்துள்ளது.

இதே காலகட்டத்தில் இந்தியாவின் ஒட்டுமொத்த வளர்ச்சியை விட தமிழ்நாட்டின் வளர்ச்சி கூடுதலாக இருந்துள்ளதை புள்ளி விவரங்கள் எடுத்துரைக்கின்றன.

அதேபோல விலைவாசி உயர்வுக்கு அடிப்படையாக உள்ள பண வீக்கம், 2020 - 21 நிதிய ஆண்டில் தேசிய அளவில் 6.16%, தமிழ்நாட்டில் 7.52% என மோசமான நிலையில் இருந்தது. தற்போது 2022-23 நிதியாண்டில் தேசிய அளவிலான பணவீக்கம் 6.65%, தமிழ்நாட்டில் தேசிய சராசரிக்கும் குறைவாக 5.96% என குறைந்துள்ளது.

உற்பத்தி, சேவை, கட்டுமானம், விவசாயம் உள்ளிட்ட அனைத்து துறைகளிலும் சமச்சீரான வளர்ச்சியை மூன்று ஆண்டுகளில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உறுதி செய்துள்ளார்கள்.

வளர்ச்சியும் வளங்களும் ஒரு சிலரிடம் குவியாமல், தமிழ்நாட்டின் அனைத்து தரப்பு மக்களுக்கும் வளர்ச்சியில் பங்கு வழங்கப்பட்டு, பல்வேறு திட்டங்களின் வழியாக வளர்ச்சியின் விளைவுகள் அவர்களுடன் பகிரப்பட்டுள்ளது.

வளர்ச்சியின் விகிதம் அதிகமானதும், பண வீக்கம் குறைந்ததும் தன்னியல்பாக நடந்தவை அல்ல. மாறாக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சீரிய திட்டங்களின் விளைவால் ஏற்பட்டவை.

உதாரணமாக மகளிர்க்கான கட்டணமில்லா பேருந்து சேவை வழங்கும் விடியல் பயணம் திட்டம்.

ஜூலை 2021ல் இத்திட்டம் தொடங்கப்பட்டது முதல் 2024 மார்ச் 18 வரை ஏறக்குறைய 440 கோடி பயணங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 2023-24 நிதியாண்டில் பயண எண்ணிக்கை, குறிப்பாக பெண்களின் எண்ணிக்கை, ஒரு நாளைக்கு சராசரியாக 45 லட்சம் பெண்களில் இருந்து 51 லட்சமாக அதிகரித்துள்ளது. இத்திட்டத்தின் மூலமாக தமிழ்நாட்டு பெண்கள் ஒவ்வொரு மாதமும் சராசரியாக 800 முதல் 1000 ரூபாய் வரை சேமிக்கிறார்கள்.

உலகம் முழுவதும் குறைந்தபட்ச வருவாய் உறுதித் திட்டம் குறித்து நூற்றாண்டுகளாக பேசிக் கொண்டே இருக்கிறார்கள். அவற்றின் சாத்தியங்கள் குறித்து பல்வேறு சோதனை முயற்சிகள் பல பகுதிகளில் நடந்துள்ளன. அவற்றுக்கெல்லாம் முத்தாய்ப்பாக, மாபெரும் நிதி உதவி திட்டமாக, கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. கூடக் குறைய 1,07,00,000 குடும்பங்கள் பயன்பெறும் வகையில் மாதம் தோறும் ஆயிரம் ரூபாய் நேரடியாக அவர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. முடியாது,சாத்தியமற்றது, நடக்கவே நடக்காது என்றெல்லாம் சொல்லப்பட்ட திட்டத்தை வெற்றிகரமாக செயல்படுத்தி, இந்தியாவில் பிற மாநிலங்கள் பின்பற்ற வேண்டிய, சமூக நோக்கில் சாதகமான நெருக்கடியை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஏற்படுத்தியுள்ளார்கள்.

புதுமைப் பெண், தமிழ் புதல்வன், தாயுமானவர் திட்டம் என வளங்களில் பங்கு வழங்கப்படாத மக்களுக்கு, அரசின் திட்டங்களின் மூலமாக நிதியையும் வளத்தையும் கொண்டு போய் சேர்த்துள்ளார் முதலமைச்சர் அவர்கள்.

இந்தியா முழுவதும் குடும்பங்களின் சேமிப்பு மூன்றே ஆண்டுகளில், 9 லட்சம் கோடி அளவுக்கு சரிந்து, வரலாறு காணாத வீழ்ச்சி அடைந்திருந்த காலத்தில், சேமிப்புக்கு உகந்த சூழலை உருவாக்கும் வகையில் நேரடி நிதி அளிக்கும் பல திட்டங்கள் இங்கே செயல்படுத்தப்படு கின்றன.

பணவீக்கம் தமிழ்நாட்டில் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது பின்னணியில் மேற்கண்ட திட்டங்களின் பங்கு உள்ளன. நீண்ட கால நோக்கில் தமிழ்நாட்டின் குடும்ப பொருளாதாரத்தை உயர்த்தும் திட்டங்கள் இவை.

இதன் அடுத்த நிலை வளர்ச்சியாக, அரசின் அனைத்து திட்டங்களையும் ஜனநாயகப்படுத்தி, எளிமைப்படுத்தி மக்களிடம் எளிதில் கொண்டு போய் சேர்ப்பதற்கான வலுவான கட்டமைப்பை மூன்று ஆண்டுகளில் முதலமைச்சர் அவர்கள் உருவாக்கி யுள்ளார்கள்.

அதற்கு மிகச் சிறந்த உதாரணமாக கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தை குறிப்பிடலாம். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சீரிய வழிகாட்டுதலோடு, இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாடு மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் ஒழுங்கமைக்கப்பட்ட வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது. திட்டத்தின் பயனாளர்கள் விண்ணப்பம் வழங்குவதற்கு ஒரே ஒரு முறை மட்டுமே அரசை அணுகினால் போதும் என்கிற அளவிற்கு அனைத்து நிலைகளிலும் சீராக ஒழுங்கமைக்கப்பட்டு மகளிர் உரிமைத் தொகை அவர்களது வங்கிக் கணக்கிற்கு அனுப்பப்பட்டது. சாதாரண சான்றிதழ் தொடங்கி அரசின் பல சேவைகளை பெறுவதற்கு, நாள் கணக்கில் அரசு அலுவலகங்களுக்கு அலைந்த நிலை மாறி, விண்ணப்பம் வழங்க மட்டும் அரசு அலுவலகங்களை நாடினால் போதும் என்கிற அளவிற்கு திட்டங்கள் எளிமைப்படுத்தப்பட்டுள்ளன.

இல்லம் தேடி கல்வி மூலம் அறிவு, இல்லம் தேடி மருத்துவம் மூலம் சுகாதாரம், நேரடி நிதி உதவி திட்டங்களின் மூலம் பொருளாதாரம் எனத் தொடங்கி, மக்களுடன் முதல்வர் திட்டத்தின் மூலம் அரசே வீடுகளுக்கு வரும் என்று கனவுக்கு அப்பாற்பட்ட ஒன்றை நிகழ்த்தி வருகிறது திராவிட மாடல்.



மருத்துவர் **எழிலன் நாகநாதன்,**
எம்.எல்.ஏ.
மாநில திட்டக்குழு உறுப்பினர்.

வாழ்க்கை முறை மாற்றத்தின் விளைவாக அதிகரித்து வரும் தொற்றா நோய்களை கட்டுப்படுத்துவது தொடர்பாக அறிமுகப்படுத்தப்பட்டது மக்களைத் தேடி மருத்துவம் திட்டம். 10969 சுகாதார பெண் தன்னார்வலர்கள், 4848 சுகாதாரப் பணியாளர்கள், 2448 பல்வகை சுகாதாரப் பணியாளர்கள் ஆகியோரைக் கொண்டு தொடங்கப்பட்டது இத்திட்டம். 45 வயதுக்கு மேற்பட்டோருக்கு வீடுகளுக்கே சென்று சுகாதார சேவைகளை வழங்கும் வகையில் இத்திட்டம் வடிவமைக்கப்பட்டது.

2024 ஜனவரி மாதம் கணக்கீட்டின்படி ஒரு கோடியே 72 ஆயிரம் பயனாளர்கள் இத்திட்டத்தின் மூலம் பலனடைந்துள்ளனர். அவர்களில் 73.6% நீரிழிவு பரிசோதனை மற்றும் ரத்த அழுத்த பரிசோதனையை தங்கள் வாழ்நாளில் முதல் முறை மேற்கொண்டனர். அனைத்து பகுதிகளிலும் வலுவான சுகாதார கட்டமைப்பை கொண்ட தமிழ்நாட்டில், வீடுகளுக்கு சென்று சுகாதார சேவைகளை வழங்குவதன் மூலமாக தொற்றாநோய்களை தொடக்க நிலையிலேயே கண்டறிந்து, சிகிச்சை அளித்து முதுநிலை மருத்துவ சிகிச்சைக்கான தேவையையும், செலவையும் குறைக்கும் பணியையும் இத்திட்டம் மேற்கொண்டு வருகிறது.

தமிழ்நாட்டின் சுகாதாரத்தின் மீதும், தமிழ்நாட்டு மக்களின் உடல் நலனின் மீதும், தமிழ்நாடு சுகாதார செலவுகளின் மீதும் நிகழ்த்தப்படும் மிகப்பெரிய முதலீடாக திட்டம் அமைந்துள்ளது.

இவை அனைத்தையும் ஏதோ ஒரு பொற்காலத்தில் ஆட்சிப் பொறுப்பேற்று செய்து முடிக்கவில்லை. மாறாக பொருளாதாரம், சமூக அரசியல் சூழல் என எல்லாவற்றிலும் நெருக்கடிகள் மிகுந்து, வீழ்ச்சியை சந்தித்துக் கொண்டிருந்த காலத்தில் தமிழ்நாட்டின் முதலமைச்சராக பொறுப்பேற்று, கொரோனா என்கிற கொடிய பேரிடர், மூன்று பெரிய பேரிடர்கள், வரலாறு காணாத வகையில் ஒன்றிய அரசின் நிதிப் பகிர்வில் நெருக்கடி என சவால்களை மட்டுமே எதிர்கொண்டு, நெருக்கடிகளை மட்டுமே எதிர்கொண்டு, எல்லாவற்றையும் சாதகங்களாக மாற்றி, கடுமையான உழைப்பின் விளைவாகவும், தீர்க்கமான திட்டங்களின் விளைவாகவும், தொலைநோக்கான பார்வையின் விளைவாகவும் தமிழ்நாட்டை வளர்ச்சிப் பாதைக்கும், தமிழ்நாட்டு மக்களை சமூக பாதுகாப்பான சூழலுக்கும் நகர்த்தியுள்ளார் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்.

நம்பிக்கைகள், கேள்விக்கு அப்பாற்பட்ட முன் தீர்மானிக்கப்பட்ட கட்டமைப்புகள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது மனுதர்மம். அதற்கு எதிரான மக்கள் இயக்கமாக, கேள்விகளை முன் வைக்கவும், தரவுகளின் அடிப்படையிலான அரசியலை மேற்கொள்ளவும் வழிவகை செய்தது திராவிட இயக்கம். அதன் வரலாற்று தொடர்ச்சியாக மட்டுமல்லாமல், அதன் வரலாற்றில் உச்சமாக தரவுகள் அடிப்படையிலான சீரிய நிர்வாகத்தை வழங்கி வருகிறார் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்.

தமிழ்நாட்டின், திராவிட அரசியலின் மையப்புள்ளி சமூக நீதி. மருத்துவக் கல்விக்கான அகில இந்திய தொகுப்பில், இதர பிற்படுத்தப்பட்ட சமூகங்களுக்கு இட ஒதுக்கீடு மறுக்கப்பட்டு வந்த சூழலில், நாடாளுமன்றத்தில் குரல் எழுப்பி, நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்து, இந்தியா முழுவதும் சமூக நீதியை உறுதி செய்தார் நம்முடைய முதலமைச்சர் அவர்கள். அதன் தொடர்ச்சியாக தமிழ்நாட்டின் அரசியலை, கொள்கை அளவிலும் திட்டங்கள் அளவிலும் இந்தியா முழுமைக்கும் ஒன்று சேர்க்கும் முயற்சியை தற்போது மேற்கொண்டு வருகிறார்.

இந்திய அரசியலில் 'திராவிட மாடல்' என்பது தவிர்க்க முடியாததாக மாறி உள்ளது. மக்கள் மயப்பட்ட அரசியல் என்பது திராவிட மாடலை பின் தொடர்வது தான் என்கிற புதிய விதி படைக்கப்பட்டு வருகிறது. காலை சிற்றுண்டி திட்டம் தொடங்கி, மகளிருக்கான இலவச பேருந்து பயணத்திட்டம், கலைஞர் மகளிர் உரிமை தொகை திட்டம், தொழில்துறையின் மீதான மிகப்பெரும் முதலீடுகள், தமிழ் நாட்டின் இளைஞர்களின் அறிவு மீது நிகழ்த்தப்படும் மாபெரும் முதலீடான நான் முதல்வன் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் இந்தியாவில் பிற மாநிலங்களால் பின்பற்றப்படுகின்றன.

தனக்கு முந்தைய தலைவர்களை விஞ்சி, மக்கள் பணியாற்றுவதை இலக்காக கொண்டு பயணிப்பது, திராவிட அரசியல் தலைவர்களின் இயல்பாக இருந்து வருகிறது. அந்த வகையில் தொடர்ச்சியான உழைப்பின் மூலமாகவும், திட்டங்களின் மூலமாகவும், தமிழ்நாட்டின் முந்தைய தலைவர்களை விஞ்சக் கூடிய இடத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடைந்துள்ளார்கள். அதற்கு மூன்று ஆண்டு கால ஆட்சியே சாட்சி.

திராவிடம் என்கிற சொல் இனத்தைக் குறிக்க, மொழியை குறிக்க, அரசியலைக் குறிக்க என ஒவ்வொரு காலகட்டத்திலும் அது பல்வேறு பொருள்களை குறித்துள்ளது. நம்முடைய முதலமைச்சர் அவர்களின் காலத்தில் 'திராவிட மாடல்' என்பது மக்களின் வாழ்வியலை குறிக்கவும், அரசு நிர்வாகத்திற்கான சூத்திரத்தை (Formula) குறிக்கவும் பயன்படுகிறது.

மறுபுறம் மனுதர்ம த்தின் வடிவமாக பல்வேறு அரசியலை கிண்டி மாளிகைகள் முன்னெடுத்து வரும்பொழுது, அவற்றை சட்டரீதியாக நேரடியாக எதிர்கொண்டு முறியடித்து, தமிழ்நாட்டின் மானத்தை காப்பாற்றி வருவதாகவும் திராவிட மாடல் அரசு விளங்குகிறது. அதிலும் நாகரிகத்தை கடைபிடித்து, நாகரிக அரசியல் பொற்காலமாக தமிழ்நாட்டை மாற்றியுள்ளார் நம்முடைய முதலமைச்சர் அவர்கள். அரசியல் காழ்ப்புணர்ச்சியின் காரணமாக பெரும் திட்டங்கள் கிடப்பில் போடப்பட்டதும், முடிக்கப்பட்ட திட்டங்கள் வீணடிக்கப்பட்டதும் தமிழ்நாட்டின் கடந்த கால வரலாறு. ஆனால் முன்னாள் முதலமைச்சர் படம் இருந்தாலும் பரவாயில்லை, மக்கள் வரிப்பணம் வீணாக கூடாது என பள்ளி மாணவர்களுக்கு ஏற்கனவே அச்சடிக்கப்பட்ட புத்தகப்பையை வழங்க உத்தரவிட்டு, நாகரிக அரசியலின் உச்சத்தை தொட்டவர் நம்முடைய முதலமைச்சர் அவர்கள்.

விளிம்பு நிலை மக்களை அதிகாரப்படுத்துவதற்காக பல்வேறு மக்கள் நலப் பணிகளை இந்த அரசு மேற்கொண்டு வருகிறது. பழங்குடியின, பட்டியலின, மிகவும் பிற்படுத்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்கள் பெருமளவு பயன்பெறும் வகையில், தமிழ்நாட்டின் அரசு பள்ளிகள் கட்டமைப்பு ரீதியாகவும், செயல்பாட்டு ரீதியாகவும், அரசு பள்ளி மாணவர்களுக்கான உயர்கல்வி வாய்ப்புகளை உறுதி செய்வதிலும் பல்வேறு முதலீடுகளை இந்த அரசு மேற்கொண்டு வருகிறது.

அண்ணல் அம்பேத்கரின் பிறந்தநாளை சமத்துவ நாள் என்று கொண்டாடுவதோடு மட்டும் அல்லாமல், 'அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம்' என்கிற பெயரில் பட்டியலின, பழங்குடியின தொழில் முனைவோருக்கான சிறப்பு தொழில் முனைவு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இது போன்ற முயற்சிகளில் விளைவாக நாட்டிலேயே பட்டியலின தொழில் முனைவோர் பெருமளவு உள்ள மாநிலமாக தமிழ்நாடு உள்ளது. மகளிரை அதிகாரப்படுத்த பல்வேறு திட்டங்களை செயல்படுத்தும் அரசு, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் குடியிருப்புகளை மகளிரின் பெயரில் மட்டுமே வழங்கப்படும் என்கிற தீவிர முடிவையும் எடுத்தது.

A Man of Few Words, But a Man of Action என்னும் வகையில், சிறந்த பண்புகளோடு தமிழ்நாட்டின் அரசியலை தமிழ்நாட்டின் வளர்ச்சியை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் செதுக்கி வருகிறார்கள்.

அதன் தொடக்க நிலை அடித்தளமாக மூன்று ஆண்டுகால திராவிட மாடல் ஆட்சி அமைந்துள்ளது. தமிழ்நாட்டின் சமூகநீதி தத்துவத்தை, மாநில உரிமை முழக்கத்தை, விளிம்பு நிலை மக்களை அதிகாரப்படுத்தும் சமநீதி கோட்பாட்டை, இந்தியாவிற்கு எடுத்துச் சொல்லி, அதனை இந்தியாவின் அரசியலாக மாற்றுவதற்கு அடிப்படைகளை அமைத்துள்ளது.

எதிர்காலத்தில் இந்திய அரசியலின் சமூக நீதியையும், மாநில உரிமையையும் முன்னெடுத்துச் செல்லும் தலைமையாக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டை செதுக்கியுள்ளார்கள்.



விழுப்புரம் மாவட்டம் செஞ்சியில் மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ 39.23 லட்சம் மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகளை சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் வழங்கினார். அருகில் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலிமஸ்தான், மாவட்ட அலுவலர் தங்கவேலு ஆகியோர் உள்ளனர்.

## விழுப்புரம் – மாற்றுத்திறனாளிகளுக்கு

# மூன்று சக்கர மோட்டார் சைக்கிள்!

## அமைச்சர் செஞ்சி மஸ்தான் வழங்கினார்!

*செஞ்சி, ஆக. 1-*

*விழுப்புரம் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலத் துறை சார்பில் செஞ்சி ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில் மாற்றுத் திறனாளிகளுக்கு நலத் திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.*

*நிகழ்ச்சிக்கு செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜய குமார் தலைமை தாங்கினார்.*

*செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலிமஸ்தான் முன்னிலை வகித்தார்.*

*விழுப்புரம் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் தங்கவேலு அனைவரையும் வரவேற்றார்.*

*நிகழ்ச்சியில் சிறு பான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு பார்வையற்ற மற்றும் செவித்திறன் பாதித்த 15 மாற்றுத்திறனாளிகளுக்கு தக்க செயலிகளுடன் கூடிய திறன் பேசியும்,*

*36 மாற்றுத்திறனாளிகளுக்கு இணைப்பு சக்கரம் பொருந்திய பெட்ரோல் ஸ்கூட்டர்களையும்,*

*39 மாற்றுத்திறனாளிகளுக்கு மோட்டார் பொருந்தியதையல் இயந்திரங்க என 39 லட்சத்து 23 ஆயிரத்து 391ரூபாய் மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரையாற்றினார்.*

*நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர் செஞ்சி மஸ்தான்:*

*மாற்றுத்திறனாளிகள் மீது அக்கறையுள்ள தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்கள் மாற்றுத்திறனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்டங்களை செய்து வருகிறார்.*

*மாற்றுத்திறனாளிகளுக்கு பசியை போக்க நிதி உதவியை தருகிறேன் என்று முத்தமிழ் அறிஞர் கலைஞர் சொன்னதால் தான் இன்று மாற்றுத்திறனாளிகள் 2000 ரூபாய் வரை உதவித்தொகை பெற்று வருகின்றனர்.*

*மேலும் இதுவரை இரண்டு கால்களைஇழந்த மாற்றுத்திறனாளிகளுக்கு இணைப்பு சக்கரம் பொருத்திய பெட்ரோல் ஸ்கூட்டர்கள் வழங்கப்பட்டு வந்திருந்த நிலையில் ஒரு கால் இழந்த மாற்றுத்திறனாளிகளுக்கும் பெட்ரோல் ஸ்கூட்டர்கள் வழங்க வேண்டும் என தமிழ்நாடு முதலமைச்சரின் கவனத்திற்கு கொண்டு சென்றதையடுத்து*

*ஒருகால் இழந்த மாற்றுத்திறனாளிகளுக்கும் பெட்ரோல் ஸ்கூட்டர்கள் வழங்க உத்தரவிட்ட தமிழ்நாடு முதலமைச்சருக்கு மாற்றுத்திறனாளிகளின் சார்பாகவும் விழுப்புரம் மாவட்டத்தின் சார்பாகவும் முதலமைச்சருக்கு அமைச்சர் செஞ்சி மஸ்தான் தனது நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொண்டார்.*

*நிகழ்ச்சியில் செஞ்சி ஒன்றிய துணை சேர்மன் ஜெயபாலன், ஒன்றிய செயலாளர் விஜயராகவன், பச்சையப்பன், இளம்வழுதி,மாவட்ட கவுன்சிலர் அகிலா பார்த்திபன்செஞ்சி நகர செயலாளர் கார்த்திக்,ஒன்றிய கவுன்சிலர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள், துறை சார்ந்த அலுவலர்கள் திமுக நிர்வாகிகள் பொதுமக்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். ஊராட்சி மன்ற தலைவர் அணையேரி ரவி நன்றி கூறினார்.*

## மன்னார்குடி ஒன்றிய

# முன்னாள் செயலாளர் கோ.பக்கிரிசாமி மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி!



*மன்னார்குடி, ஆக. 1-*

*1993 கழகத்திற்கு சோதனைவந்த போது மன்னார்குடி ஒன்றிய தி.மு.க. பொறுப்பாளராகவும் அதனை தொடர்ந்து ஒன்றிய கழக செயலாளராகவும் திறம்பட பணியாற்றியவரும், சுயமரியாதை சுடரொளி ஐயா மன்னை மற்றும் முன்னாள் அமைச்சர் கோ. சி. மணி ஆகியோரின் அன்பைபெற்றவருமான கழக பணியாற்றிய கோ.பக்கிரிசாமி அவர்கள், வயது 90. நோய்வாய்ப்பட்டிருந்த நிலையில் நேற்று முன்தினம் (30.07.2024) இரவு, உள்ளிக்கோட்டையில் அவரது இல்லத்தில் காலமானார் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.*

*செய்தியறிந்ததும் கழக முன்னணியினர், கழகத் தோழர்கள் திரளாகச் சென்று மறைந்த பக்கிரிசாமி அவர்களின் உடல் மீது மலர் மாலை வைத்து இறுதி அஞ்சலி செலுத்தினர்.*



நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு நகராட்சிக்கு உட்பட்ட நெசவாளர் காலனி பகுதியில் தூய்மை இந்தியா 2.O திட்டத்தின் கீழ் ரூ. 36 லட்சம் மதிப்பீட்டில் பொது கழிப்பிடம் கட்டுவதற்காக துவக்க விழா நடைபெற்றது. இதில் நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில், நகர் மன்ற தலைவர் நளினி சுரேஷ்பாபு ஆகியோர் கலந்து கொணடு பணிகளை துவக்கி வைத்தனர். இந்நிகழ்வில் நகராட்சி பொறியாளர் சரவணன், நகர மன்ற துணைத் தலைவர் கார்த்திகேயன், நகர மன்ற உறுப்பினர்கள் ராஜா, அசோக் குமார், செல்வி ராஜவேல், தாமரைச்செல்வி மணிகண்டன், செல்லம்மாள் தேவராஜன், திவ்யா வெங்கடேஸ்வரன், சண்முகவடிவு, புவனேஸ்வரி உலகநாதன் மற்றும் கழக நிர்வாகிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

## குற்றாலத்தில்

# சுற்றுலா பயணிகளுக்கு அனுமதி!

தென்காசி, ஆக. 1–

தென்காசி, மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் கடந்த சில நாட்களாக பலத்த மழை பெய்து வருகிறது. இதனால் கடந்த 28ந் தேதி குற்றாலம் மெயின் அருவி, ஐந்தருவி, பழைய குற்றாலம், புலியருவி, சிற்றருவி ஆகியவற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. இதனால் அனைத்து அருவிகளிலும் சுற்றுலா பயணிகள் குளிக்க தடை விதிக்கப்பட்டது.


இந்த நிலையில், மழை குறைந்து நீர்வரத்து சீராக இருப்பதையடுத்து குற்றாலத்தின் மெயின் அருவி, ஐந்தருவி, பழைய குற்றால அருவி உட்பட அனைத்து அருவிகளிலும் சுற்றுலாப் பயணிகள் குளிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

3 நாட்களாக விதிக்கப்பட்டிருந்த தடை நேற்று நீக்கப்பட்டுள்ள நிலையில், அருவிகளில் ஆர்ப்பரித்து விழும் தண்ணீரில் சுற்றுலா பயணிகள் ஆனந்த குளியல் போட்டு வருகின்றனர்.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## ஈரோடு மு. சின்னசாமி

## ஆகஸ்ட் 1 (1979)



**தமிழக சட்டப்பேரவை உறுப்பினராக 1967ல் ஈரோடு தொகுதியிலும், 1971ல் மொடக்குறிச்சி தொகுதியிலும் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்பாக பணியாற்றியவர்.**

**கழகம் அறிவித்த அறப்போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**ஈரோடு, ஆப்பக்கூடலில் 1969ஆம் ஆண்டு ஏப்ரல் 7ஆம் தேதி தலைவர் கலைஞர் கலந்து கொண்ட கூட்டத்தில் திடீரென்று சூறாவளிக் காற்றுடன் பலத்த மழை கொட்டியதால் பந்தல் மேடை சரிந்து விழுந்ததோடு, மின்சாரமும் தடைபட்டு என்ன நடக்கிறது என்று தெரியாத நிலை ஏற்பட்டபோது, தலைவரை தனது தோளில் தூக்கிக் கொண்டு காருக்கு சென்று சேர்த்தார்.**

**இந்நிகழ்வை தலைவர் கலைஞர் தனது ‘நெஞ்சுக்கு நீதி’ நூலில் குறிப்பிட்டுள்ளார்.**



## தலைமைக் கழகம்

## தி.மு.க.